

## மஸ்ஜிட் இந்தியா பகுதி

# பாதுகாப்பானது

## டத்தோ பண்டார் விளக்கம்

கோலாலம்பூர், ஆக. 25-

தலைநகரில் மிகவும் பிரசித்திபெற்ற மஸ்ஜிட் இந்தியா பகுதி மிகவும் பாதுகாப்பானதே என டத்தோ பண்டார் மைமுனா முகமட் ஷாரிஃப் கூறினார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண்சரிவு ஏற்பட்டாலும்கூட, நேற்று அப்பகுதியில் உள்ள வியாபாரிகள் வழக்கம்போல் தங்களின் வர்த் தகத்தை மேற்கொண்டு வந்ததாகவும் அவர் சொன்னார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை அப்பகுதியில் ஏற்பட்ட மண் சரிவில் இந்தியாவைச் சேர்ந்த 48 வயதுடைய மாது ஒருவர் 8 மீட்டர் ஆழமுள்ள குழியில் விழுந்தார்.

அப்பகுதியில் சோதனையை மேற்கொண்ட தீயணைப்பு - மீட்புப் படையினர் அப்பகுதி மிகவும் பாதுகாப்பானதே என கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று அங்கு வர்த்தகம் மிகவும் சீரான முறையில் நடைபெற்று வந்தது. ஆனால், அங்குள்ள வியாபாரிகள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் ஆலோசனை கூறினார்.

மஸ்ஜிட் இந்தியா பாதுகாப்பானது என்றாலும்கூட, பொதுமக்கள் அதிகமாக நடமாடுவதை குறைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

மஸ்ஜிட் இந்தியா பாதுகாப்பு பகுதி என்பதால் அதனை மூட வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் சொன்னார்.

இதனைத் தவிர்த்து, அப்பகுதியில் குழிதோண்டும் நடவடிக்கை எதும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.